யிருக்கிறோம். நிலத்தை வளப்படுத்த முன்னால் கடன் பெற்றிருப்பார்களானால், அந்தக் கடனைத் தீர்க்க மறு கடன் கேட்டால், அதை வழங்க நிலவள வங்கிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஆனால், முன் கடன் கல்யாணம் போன்ற குடும்பச் செலவுகளுக்காகப் பெற்றிருந்தால், அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நிலவள வங்கிக்குக் கிடையாது. அப்படிப்பட்ட கடன்களைத் தீர்க்க அர்பன் பாங்க் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சில நிலவள வங்கிகள் பல நாட்களாகச் செயலற்ற முறையில் இருக்கின்றன. யாருக்கும், பங்குதாரர்களுக்கும் கூட எந்தவிதமான கடனும் கொடுக்கவில்லை. அந்த மாதிரியாகச் செயலற்று இருக்கின்ற வங்கிகளையும், அதன் கமிட்டிகளையும் "சூப்பர்சீடு" செய்ய இலாக்கா நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் நிலவள வங்கி நிர்வாகிகள் ஒழுங்காகச் செயல்படாவிட்டால், அவர்களை நீக்கிவிட்டு, வேறு நிர்வாகிகளைப் போட்டுவிடலாம். இதை வங்கிகளை சூப்பர்சீட் செய்யாமலே செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கிணற்றை ஆழப்படுத்த லோன் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கிணறு ஆழப்படுத்தப்பட்டதா என்று பார்க்கப் போகின்ற அதிகாரி கிணற்றிலே இறங்கி பார்க்கிறாரா அல்லது அப்படிப் பார்ப்பதற்கு அவருக்கு ஏதாவது கருவி கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிணறு ஆழப்படுத்துவது பற்றி அடுத்த கேள்வியில் வருகிறது. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் முன்கூட்டி ஆழம் பார்த்துவிட்டார்கள். அடுத்து வருகின்ற கேள்விக்குத் துணை கேள்வியாக கேட்டால் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***45 வினா—திரு. என் மருதாசலம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளில் விவசாயிகள் கிணறு அடிவெட்டு, நில அபிவிருத்திப் பணிகள் செய்ய தற்போது வழங்கப்படும் அதிகபட்சக் கடன் தொகை ரூபாய் பத்தாயிரம் என்றிருப்பதை இருபதாயிரமாக உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது கிணற்றை ஆழப்படுத்துவதற்கு அதிகமான பணம் கொடுக்கலாமா என்பது பற்றிய கேள்வி. ஏற்கெனவே, இப்படிப் பணம் அதிகமாகக் கொடுப்பதிலே பல புகார்கள் வந்து, இப்படி வாங்கும் பணத்தினால் பல சீர்கேடுகள் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டு, அதன் காரணமாக இது ரிசர்வ் பாங்குக்குத் தெரிவிக்கப்பட்டு, ரிசர்வ் பாங்க் அதற்காக ஒரு தனிக் குழுவை அனுப்பியது. அவர்கள்

சென்று இது விஷயமாகக் கேட்டபொழுது, இதில் சில முறை கேடுகள் நடந்திருக்கின்றன என்று தெரிந்தது. எனவே, அவர்கள் இப்படிக் கூடுதலாகப் பணம் கொடுக்கக் கூடாது என்று சொல்லி விட்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரிக் கிணறுகள் வெட்டி, அதிலே தண்ணீர் வருவதற்காகச் செலவழிக்கப்படுகின்ற பணம் 10,000 ரூபாய் போதாது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கிணற்றை வெட்டுவதற்கு முதலிலேயே 35,000 ரூபாய் கடன் பெற்றுக்கொள்ளலாம். வெட்டுகின்றபொழுதே, அவர்களுக்கு எவ்வளவு தேவை என்று தெரிந்திருக்கவேண்டும். கோவை மாவட்டத்திலே வெட்டும் கிணறுகளுக்கு அதிகமாகச் செலவழிகிறது என்கிறார்கள். அப்படிப்பட்ட கிணறுகளுக்குத் தனிப்பட்ட முறையிலே பணம் அதிகமாகக் கேட்கவேண்டும். ஆழப்படுத்தவென்று 40,000 ரூபாயாக கொடுக்கப்பட முடியும். முதலிலே இவ்வளவு பணம் கிணறு வெட்டுவதற்காக என்று வாங்கிவிட்டு, பிறகு ஆழப்படுத்துவதற்காக என்று கேட்டு வாங்கும் பணம் அதற்காக உபயோகப்படுத்தப்படுவதில்லை. இதைச் சுட்டிக்காட்டித்தான் ரிசர்வ் பாங்க் அப்படி அதிகப் பணம் கொடுக்கத் தேவையில்லை என்று ஆட்சேபனை பண்ணுகிறது.

திரு. டி. கணபதி : விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற இந்த கூட்டுறவுத்துறைக் கடன்களில் நூற்றுக்கு 10 ரூபாய் விதம் 'ஷேர் கேபிடல்' செலுத்தச் சொல்லுகிறார்கள். அதனால், விவசாயிகள் கடன் வாங்குகின்ற நேரத்திலே பெரும் தொகையை ஷேர் கேபிடலாகச் செலுத்திவிட்டு பாக்கித் தொகையை வாங்கும் பொழுது அந்த பணம் அவர்களுக்குப் போதுமானதாக இருப்பதில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அந்த ஷேர் கேபிடலைக் குறைக்க, ஏதாவது திட்டம் இருக்கிறதா இந்த அரசாங்கத்தினிடம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தக் கேள்வி நிலவள வங்கியைப் பற்றியது. நீண்டகாலக் கடன் கொடுப்பது நிலவள வங்கி; குறைந்த காலக் கடன் கொடுப்பது சென்ட்ரல் பேங்க் போன்றவை. இந்த 10 சத விதம் ஷேர் கேபிடல் என்பது சென்ட்ரல் பாங்கை ஒட்டிய ஒன்றாகும். எனவே, அவர்கள் கடன் கொடுக்கும் பொழுது அதைப் பிடித்துக்கொண்டு பாக்கித் தொகையைக் கொடுப்பார்கள். நிலவள வங்கியைப் பொறுத்த மட்டில் இந்த ஷேர் கேபிடல் 5 சத விதம் தான். அதுவே கூட்டுறவு கழகங்களாய் இருந்தால் 2½ சத விதம் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இந்த நிலவள வங்கிகளிலே கிணறு அப வெட்டு வெட்டுவதற்காக கடன் கொடுக்கிறார்கள். அதிலே அதிகபட்ச கடனாக 10,000 ரூபாய் தான் கொடுக்கப்

1971 ஜூன் 24]

படுகிறது. ஆனால் இந்த ஷேர் கேபிடல் எல்லாம் போக விவசாயிகளுக்கு கையிலே கிடைப்பது 9,000 ரூபாய் தான். ஆகவே, அதிகபட்சமாக 20,000 ரூபாய் கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 10,000 ரூபாய்க்கு 9,000 ரூபாய் தான் கிடைக்கிறது என்று சொல்லுவது சரியில்லை. நில வள வங்கியிலே 5 சத விதம் தான் ஷேர் கேபிடல். சென்ட்ரல் பாங்கியிலேதான் 10 சத விதம் ஷேர் கேபிடலுக்கு பிடிக்கிறார்கள். நான் ஏற்கனவே தெரிவித்தேன் இதிலே எவ்வளவோ சீர்கேடுகள் நடந்திருக்கிறது என்று. ஆழப்படுத்த அதிகமாக செலவழிகிறது, எனவே, 10,000 ரூபாயோ அல்லது 20,000 ரூபாயோ கொடுத்து விடுவது தான் சரியானது என்று நானும் நினைக்கிறேன். ஆனால், ஒரு வருஷத்திற்கு முன்னால் கிணற்றை ஆழப்படுத்த நில வள வங்கியிலே வாங்கிய பணம் உள்ளபடியே அந்த நோக்கத்திற்கு செலவிடப்படாமல் சீர்கேடுகள் நடந்திருக்கிறது என்று கருதி, அதை ரிசர்வ் பாங்குக்குத் தெரிவித்து, ரிசர்வ் பாங்கியிலே இருந்து தனிக் குழு சென்று விசாரணை செய்து பார்த்து பலவற்றைத் தெரிவித்தது. அதன்படி பார்க்கப்போனால், விவசாயிகள் கிணறுகளின் உச்ச விளிம்பை மட்டும் உயர்த்திவிட்டு, அதை ஆழப்படுத்தி விட்டதாகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால், இந்த ஆழப்படுத்தியதை அறிய கிணற்றின் தரை மட்டத்திலே இருந்து அளப்பதா, கிணற்றின் உச்சியிலே இருந்து அளப்பதா என்ற சங்கடம் வந்ததும், அப்படி ஆழப்படுத்துவதற்காகப் பணம் தர வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். கொடுக்கப்படுகின்ற பணம் நாட்டின் வரிப் பணம் இல்லை ரிசர்வ் பாங்கியிலே இருந்து அந்தப் பணத்தை பெற்று விவசாயிகளுக்கு கொடுக்கிறோம். ரிசர்வ் பாங்கியிலே இருந்து பெறுவதால் அவர்கள் கூறும் சில நிபந்தனைகளுக்கு நாம் கட்டுப்பட வேண்டியிருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். He who pays the piper can call the tune. அவர்களிடமிருந்து பணம் பெறுவதால் அவர்கள் நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டியிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : நில வள வங்கி மூலமாகக் கடன் பெறுவதற்கு ஏ.ஆர்.சி. திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. ரிசர்வ் பாங்க் கடன் அளித்து வருகிறது. ஆனால் இவைகளில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதனால், இந்த உதவிகளை முழுவதும் பெற முடியாத கஷ்டம் இருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ரிசர்வ் பாங்க் கொடுக்கும் கடன் முழுவதையும் நாம் பெற முடியாமல் இருப்பது உண்மைதான். சில விதி முறைகளை நிறைவேற்ற முடியாமல் இருப்பதன் காரணமாக கடன்களைத் திருப்பி அளிக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் சீர்படுத்துவதற்கு ஏ.ஆர்.சி. சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

[1971 ஜூன் 24

திரு. ஏ. ஆர். சுப்பையா : கிணறுகளுக்கு இடையே அதிக இடைவெளி இருக்கவேண்டுமென்ற விதி, சில சமயம் கிணறு வெட்டுவதைத் தாமதம் ஆக்கிவிடுகிறதே. இந்த இடைவெளி பிரச்சினையைத் தீர்க்க அரசு ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : 15 ஏக்கருக்கு ஒரு கிணறு என்றுதான் நிபந்தனை விதித்திருக்கிறார்கள். கடன் கொடுத்தவர்களின் நிபந்தனைகளுக்கு நாம் கட்டுப்பட்டாக வேண்டியிருக்கிறது. இவ்வளவுதான் ஆழம், இவ்வளவு தான் அகலம் வேண்டுமென்று ஏ.ஆர்.சி. நிபந்தனை விதிக்கவில்லை. எனவே, ஆழமாகவும் அகலமாகவும் கிணறுகளை வெட்டி, தமிழ்நாடு மேனி எங்கும் செழிக்கச் செய்ய வேண்டும்.

திரு. வீ. மலைக்கண்ணன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சப்மெர்சிவ் கிணறுகள் வெட்ட ரூபாய் 6,000, ரூபாய் 7,000 செலவு ஆகிறது. எனவே, இப்போது கொடுக்கப்பட்டு வரும் ரூபாய் 5,000, ரூபாய் 8,000 ஆக உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ரூபாய் 5,000 என்று ஒரு விதி இருந்து வருகிறது. தனிப்பட்ட இடங்களில், அதிகமாகக் கேட்கும்பொழுது, விதி விலக்கு கொடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : கடன்கள் இரு தவணைகளாகக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக ஒரே தவணையாகவே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? இரு தவணைகளாகக் கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கால தாமதத்தைத் தவிர்த்து ஒரே தடவையாகப் பணம் பெற வேண்டுமானால், தகுந்த ஈடு இருக்கும் பட்சத்தில், பணம் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் சட்டமுன் வடிவு.

1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன் வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.